1975 மார்ச் 5]

திருமதி ஜோதி வெங்கிடாசலம் : சூரியகாந்தி எண்ணெயையும் மற்ற எண்ணெய் ரேஷன் கடைகளிலே கொடுக்கப்படுவதைப்போல—ரேஷன் கடைகளிலே கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் கூட்டுறவுத் துறையிலே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடைகள் இவைகள் மூலம் அதை விற்க முயற்சி எடுக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்த சூரியகாந்தியிலிருந்து தயாரிக்கப்படுகின்ற எண்ணெய் மனிதனுடைய கொழுப்பை அடக்கக்கூடியதாகச் சொல்லப்படுகிறதே ? ஆகவே கொழுப்பை அடக்குகின்ற எண்ணெய் நம்முடைய நாட்டிற்கு அதிகமாகத் தேவைப்படுவதால் அதிகமாக இதை உற்பத்தி செய்யக்கூடிய முறையில் இதற்கு சப்ஸிடி கொடுக்க அரசு முன்வருமா ?

(பதில் இல்லை)

கோவை மாவட்டத்தில் புதிய நீர் மின் திட்டம்

* 188 வினா—திரு. என். கிட்டப்பா:
திரு. என். கே. பழனிசாமி :

மாண்புமிகு தொழில்-மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கட்ட இருக்கும் நீர் மின்சார நிலையத் திட்டத்துக்கு கேரள மாநில அரசு ஆட்சேபம் தெரிவித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம். கோயம்புத்துாரில் நெல்லித்துறை நீர் மின்சக்தித் திட்டம் காவிரி ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைக்கப்படுகிறது என்றும் இது இரு மாநிலப் பாங்குடையது என்றும் கூறி கேரளா அரசு இத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

(ஆ) இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் இருமாநிலப் பாங்கு எதுவும் ஏற்படாதென்று இவ்வரசு மத்திய நீர்மின்சக்தி ஆணைக்குழுவிற்குத் தெரிவித்துள்ளது. இறுதியாக, கேரளா அரசின் மறுப்புரைகளை உரியவாறு பரிசீலித்த பின்னர், 1974 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத் திட்டத்திற்கு மத்திய நீர் மின் சக்தி ஆணைக்குழு அனுமதி வழங்கி, திட்ட ஆணைக்குழுவும் இதற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தற்பொழுது இந்தத் திட்டம், தமிழ்நாடு மின்சார வாரியத்தால் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என. கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு மெகோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? இதை விரைவுபடுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த மின் நிலையத்தின் உற்பத்தித்திறன் 50 மெகோவாட். இதிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு சராசரி 109 மிலியன் யூனிட் மின்சாரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீட்டுச் செலவு சுமார் 10 கோடி ரூபாய் என்று இருக்கிறது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறைவேற்றப்படுவதாகக் குறிப்புகள் இருக்கின்றன.

திரு. என். கே. பழனிசாமி : சார், அதற்கான மெஷினரிகள் எல்லாம் வந்துவிட்டனவா? அல்லது ஆர்டர்தான் கொடுக்கப்பட்டிருக்கிறதா? இந்தத் திட்டம் எப்போது பூர்த்தி செய்யப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே நிறைவேற்றுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஆரம்ப வேலைகள்தான் நடைபெற்று வருகின்றன.

அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை

* 189 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர், 28—1—1974 அன்று வினா எண். 197-க்கு அளித்த விடையை யொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அலுமினியம் ப்ளோரைட் தொழிற்சாலை ஒன்று தமிழ்நாட்டில் அமைப்பது தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தொழிற்சாலை அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அயல்நாட்டு நிறுவனம் ஒன்றின் கூட்டு உதவியைப் பெறுவதற்கு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டு இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இதை எங்கே அமைக்க இருக்கிறார்கள்? இதற்காகும் மதிப்பீட்டுத் தொகையை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மதுரைக்குப் பக்கத்திலே அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. மதிப்பீட்டுச் செலவு ஐந்து கோடியே ஐம்பது லட்சம் ரூபாய்.